Clr.No.19

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. STC.4183/2017 |
| Sessions | : | |
| Deposition of witness for | : | Prosecution RW 1 |
| Name | : | நடேசன் ஹரிஹர கிருஷ்ணன் |
| Father's/Husband's Name | .. | ஹரிஹரகிருஷ்ணன் |
| Village | | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 51 |

Date : 09.10.2024

(Solemnly affirmed before this court under act X of 1969)

புகார்தாரர் நீதிமன்றத்தில் ஆஜர்.

முதல் விசாரணை:-

1. இந்த வழக்கின் புகார் தரராரரான ஸ்ரீதர் அரசு என்பவர் என் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். புகார்தாரர் என்னிடம் லட்சக்கணக்கில் பணத்தை ரொக்கமாக கொடுத்ததாகவும் அதற்கு திரும்ப செலுத்துவதற்கு நான் காசோலை கொடுத்து அந்த காசோலைகள் வங்கியால் திருப்பப்பட்டதாக என் மீது வழக்கு தொடுத்துள்ளார்.

புகார்தாரர் என்னுடைய நிறுவனத்திற்கு கிரானைட் கலை கிரெடிட் முறையில் சப்ளை செய்து வந்தார். அவர் கிரானைட் கல் சப்ளை செய்ததால் பாதுகாப்பிற்காக காசோலைகள் அவரிடம் நான் கொடுத்திருந்தேன்.

2. அவர் எங்களுக்கு சப்ளை செய்த கிரானைட் கல் களுக்கு கணக்கு வழக்கு முடித்து வங்கி மூலமாக மொத்த பணத்தையும் நாங்கள் செலுத்தி விட்டோம். எங்கள் தரப்பு சாட்சியாக புகார்தாரர் வைத்துள்ள வங்கிக் கணக்கின் வங்கி மேலாளர் நீதிமன்றத்தில் அழைத்து நிரூபணம் செய்து விட்டோம். 2014 ஆம் வருடம், தொழில் ரீதியான ஒப்பந்தம் எனக்கும் புகார்தாரருக்கும் ஏற்படுத்திக் கொண்ட பொழுது அவர் பல லட்ச ரூபாயை ரொக்கமாக என்னிடம் கொடுத்ததாக வழக்கில் கூறியுள்ளார். ஆனால் அவர் அவ்வாறு எனக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை.

3. அந்த ஒப்பந்தம் மேற்கொள்ளும் பொழுது, நான் எந்த பணமும் பெறவில்லை. அவ்வாறு பணம் பெற்றதற்கு, ரசீது அல்லது ப்ரொனோட் எதுவும் நான் கொடுத்ததில்லை. ஒப்பந்தம் ஆவணத்தை பார்க்கும் பொழுது அதில் பணம் என்ற இடத்தில் இடைவெளி விடப்பட்டிருக்கும். எந்த தொகையும் அதில் பூர்த்தி செய்யப்பட்டிருக்காது. வழக்கில் தாக்கல் செய்துள்ள புகாரில், அவரிடம் நான் பணம் பெற்றதற்கு ஐந்து காசோலைகள் கொடுத்ததாக கூறியுள்ளார். அதாவது 2014 ஆம் ஆண்டு பணம் பெற்றதற்கு 2017 ஆம் வருடம் ஜூலை மாதம் நான் காசோலைகள்

கொடுத்ததாக கூறியுள்ளார். 2017 ஆம் வருடம் ஜூலை மாதத்தில் இருந்து அக்டோபர் மாதம் வரை நான் இந்தியாவில் இல்லை. வெளிநாட்டில் இருந்தேன்.

4. அதற்கு ஆதாரமாக, என்னுடைய கடவுச்சீட்டு மற்றும் குடியேற்றம் சம்பந்தப்பட்ட முத்திரைகள் ஆகியவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். (நகல்கள் அசல் கடவுச்சீட்டுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது.)(குடியேற்ற முத்திரையுடன் கூடிய கடவுச்சீட்டு எ.ம.சா.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது). கடந்த 2017 ஆம் வருடம் நான் அமெரிக்காவில் இருந்த சமயத்தில் புகார்தாரர் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி உள்ளார். இன்டிமேஷன் சென்ட் என்று அது திருப்பப்பட்டுள்ளது. நான் வெளிநாட்டில் இருந்ததால், வழக்கறிஞர் அறிவிப்பை பற்றி எனது கவனத்திற்கு வரவில்லை.

5. அதே ஆண்டு 2017 ஆம் வருடத்தில், நான் இந்தியாவில் இல்லாத பொழுது, புகார்தாரர் காவல் நிலையத்தில் என் மீது புகார் ஒன்று கொடுத்திருந்தார். பணம் கேட்டு அவர் என் வீட்டுக்கு வந்ததாகவும், அடியாட்களை வைத்து நான் அவரை மிரட்டியதாகவும் அந்த புகாரில் குறிப்பிட்டிருந்தார். அந்த நேரத்தில் நான் அமெரிக்காவில் இருந்தேன். அது ஒரு பொய்யான புகாராகும். (30.08.2017 அன்று புகார் தாரர் என் மீது ராயப்பேட்டை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் நகல் எ.ம.சா.17 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது).

6. இந்த வழக்கின் சாராம்சம் என்னவென்றால் வேறொரு தொழிலுக்காக பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்ட காசோலைகளை பணத்தைப் பெற்றுக் கொண்டு ரொக்க பணம் கொடுத்ததாக பொய்யாக கூறி அதற்காக காசோலைகள் கொடுக்கப்பட்டது என்றும் அதனை வங்கியில் வைப்பீடு செய்து என் மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது. வழக்கு தீர விசாரணை செய்து முடிவு செய்யவும். ராயப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் செய்த அதே சமயத்தில் நீதிமன்றத்திலும் இந்த வழக்கை புகார் தாக்கல் செய்துள்ளார். இந்த புகாரில், ராயப்பேட்டை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை மறைத்து தாக்கல் செய்துள்ளார்.

புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-

7. எனது முதல் சாட்சியத்தில் புகார்தாரரிடம் பணத்தைப் பெற்று முழுவதுமாக திரும்ப செலுத்தி விட்டேன் என்று கூறியுள்ளேன் எவ்வளவு தொகை பெற்றேன் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்றால் நான் புகார்தாரிடம் பணம் பெற்றதாக என்னுடைய முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை. கிரானைட் வியாபாரம் சம்பந்தமாக ரூபாய் ஒரு கோடியே 40 லட்சம் ரூபாய் புகார்தாரருக்கு நான் திரும்ப ஒப்படைத்துள்ளேன். என்னுடைய வங்கிக் கணக்கில் இருந்து புகார்தாரருக்கு பணம் செலுத்தப்பட்டதா அல்லது நிறுவனத்தின் வங்கி கணக்கில் இருந்து பணம் செலுத்தப்பட்டதா என்றால் நிறுவனத்தின் வங்கி கணக்கில்

இருந்து பணம் செலுத்தப்பட்டது. எந்தெந்த நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் இருந்து பணம் வைப்பீடு செய்யப்பட்டது என்றால் Granite Imports & Krishna Exports நிறுவனங்களின் வங்கிக் கணக்கில் இருந்து புகார்தாரின் வங்கி கணக்கு நான் செலுத்தினேன்.

8. மேற்படி நிறுவனங்களின் வங்கிக் கணக்கிலிருந்து தனித்தனியாக எவ்வளவு ரூபாய் புகார் தாரரின் வங்கி கணக்கிற்கு நான் பணம் செலுத்தினேன் என்றால் அந்த ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்த பிறகு தான் என்னால் கூற முடியும். நான் புகார் தாரருக்கு கொடுத்த பணம் போக மீதம் ரூபாய் 80,00225/- ரூபாய் அவருக்கு கொடுக்க பாக்கி கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. வங்கி மேலாளரை சாட்சியாக நான் விசாரிக்கும் பொழுது நான் குறிப்பிட்ட இரண்டு பண பரிவர்த்தனைகளை புகார்தாரரின் வங்கி கணக்கில் வைப்பீடு செய்யப்படவில்லை என்று வங்கி மேலாளர் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது சரியல்ல. தேதி மாறி இருந்தது. அதனை மீண்டும் சரிபார்த்து அவர் சாட்சியம் அளித்துள்ளார்.

9. நானும் புகார் தாரரும் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம் என்று கூறியுள்ளேன் அதன் தேதி என்ன என்றால் மார்ச் 2014 ஆகும் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி ஆவணத்தில், புகார்தாரர் தன்னுடைய நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் பண உதவி பெற்று எதிர்காலத்தில்

எனக்கு தொழிலுக்கு தேவையான பணத்தை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அன்று அவர் எழுதிய அந்த சரத்தை நான் அவ்வாறு புரிந்து கொள்ளவில்லை. ஏனென்றால், எங்களுக்குள் தொழில் ரீதியாக என்ன செய்யப் போகிறோம் என்பது எங்களுக்கு நன்கு தெரியும். அதனால் அவர் எழுதிக் கொண்டு வந்ததை நான் கையொப்பம் இட்டேன்.

10. அவ்வாறு, புகார் தாரர் தன்னுடைய நண்பர்கள் மற்றும் உறவினர்கள் ஆகியோரிடம் பணத்தைப் பெற்று எனக்கு கொடுக்கிறார் என்று தெரிந்தும் பணத்தை பெற்றுக் கொண்டு நான் மறுக்கிறேன் என்றால் அது சரியல்ல. நான் பணம் அவரிடம் வாங்கியதற்கு ஆதாரமாக புரொநோட் அல்லது ரசீது ஆகியவை கையப்பமிட்டு கொடுத்தேனா என்றால் அவ்வாறு நான் எதுவும் கையொப்பமிட்டு கொடுக்கவில்லை. நான் புகார்தாரரிடம் வாங்கிய பணத்திற்காக தான் ஆதாரமாக காசோலைகளை நான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. கண்டெய்னர் சப்ளைகள் தேவைக்காக ஆதாரமாக பூர்த்தி செய்யப்படாத காசோலைகளை அவரிடம் நான் கொடுத்தேன்.

11. நான் பூர்த்தி செய்யப்படாத காசோலைகளை கொடுக்கவில்லை என்றும் என் கைப்பட காசோலைகளை எழுதி கையொப்பமிட்டு நான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள கடவுச்சீட்டில், மேற்படி ஜூலை மாதம் 2017 இல் இருந்து அக்டோபர் மாதம் 2017 வரை அமெரிக்க நாட்டில் நான்

குடியிருந்தேன் என்பதற்கு ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது. புகார்தாரர் என் மீது எந்த தேதியில் புகார் கொடுத்தார் என்றால் கடந்த 30.08.2017 அன்று என் மீது புகார் கொடுத்தார்.

12. என்ன சங்கதிகளை கூறி புகார் தாரர் என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அதே சரத்துக்களை கூறி என் மீது புகார் அளித்துள்ளார். அதற்காக, புகார் கொடுக்கப்படவில்லை என்றும் நான் புகார் தாரரை அடியாட்கள் வைத்து மிரட்டினேன் என்பதற்காகவும் அவரை ஏமாற்றி விட்டேன் என்பதற்காகவும் தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. புகார் தரார் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பு நானும் அல்லது என்னைச் சார்ந்த மற்ற நபர்களோ புகார் தாரர் மீது புகார் கொடுக்கப்பட்டதா என்றால் தற்போது கேள்வியாக கேட்கப்பட்டதால் நான் கூறுகிறேன். நான் வெளிநாட்டில் இருந்த சமயத்தில், புகார் தாரர் அடியார்களோடு நான் குடியிருக்கும் அடுக்குமாடி குடியிருப்புக்கு வந்து தகாத வார்த்தைகளால் என்னையும் என்னுடைய மனைவியையும் திட்டி உள்ளார் அதனால் என் மனைவி அவர் மீது புகார் கொடுத்தார். எந்த தேதியில் மற்றும் புகார் பதிவு செய்யப்பட்டதற்கான ரசீது எண் என்ன என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை.

13. என்னுடைய மனைவி புகார் தாரர் மீது பொய்யான புகார் கொடுத்ததாலும் நான் அடியாட்களை வைத்து மிரட்டியதாலும் அவரை நான் ஏமாற்றியதாலும் தான் புகார்தாரர் என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. புகார்தாரர் என் மீது கொடுத்த புகாருக்கு காவல் நிலையத்தில் சி எஸ் ஆர் என் கொடுக்கப்பட்டதா என்றால் அவ்வாறு இல்லை. புகார்தாரர் புகார் கொடுத்த அன்று புகார் முடித்து வைக்கப்பட்டது என்றும் வேண்டுமென்றே நீதிமன்றத்தில் தவறுதலாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்த புகாரின் சங்கதிகளோடு காவல் நிலையத்தில் புகார்தாரர் புகார் கொடுத்தார் என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

14. என்னுடைய முதல் சாட்சியத்தில் எனக்கும் புகார் தாரருக்கும் வேறு சில தொழில்கள் இருந்ததாக கூறியுள்ளேன் அவைகள் என்ன என்றால் எனக்கும் புகார் தாரருக்கும் ஒரே தொழில் உறவு மட்டும் தான் இருந்தது. அது கிரானைட் பிசினஸ் ஆகும். நான் கிரானைட் தொழில் ஏற்றுமதிக்காக காசோலைகளை நான் கொடுக்கவில்லை என்றும் புகார்தாரர் எனக்கு கொடுத்த ரொக்க தொகையை திரும்ப கொடுப்பதற்கு அவருக்கு காசோலைகளை கொடுத்தேன் என்றால் சரியல்ல.